வர்த்தக அமைச்சு

# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## வெற்றிடங்கள்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் வெற்றிடமாக நிலவும் பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### (1) பணிப்பாளர் நாயகம் - (HM 2-2)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் தொடர்பான கலாநிதிப் பட்டம் மற்றும் குறைந்தபட்சம் 10 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் சேவை அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை இருத்தல் வேண்டும். கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் 05 வருட கால சேவை அனுபவம் சகிதம் இருத்தல் வேண்டும். மேலும் பல்வகை பணி குழுக்களை கையாளுதல், மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களை முறையாக அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அரசாங்க சேவையிலுள்ள அதிகாரிகளுக்கு**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அதிகாரம், கடமைகள் மற்றும் வேலைகளை வினைத்திறனுடன் செயற்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுவதற்கு இலங்கை நிர்வாகச் சேவையின் முதலாம் வகுப்பு அல்லது அதற்கு மேற்பட்ட தர அதிகாரிகளை இரண்டாம் நிலை அடிப்படையில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கலாம்.

**சம்பள அளவு: (HM 2-2):** ரூபா 93,020/- 12x2700 = ரூபா 125,420/- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தெரிவு செய்யப்படும் விதம்:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**வயதெல்லை:** 55 வயதிற்கு மேற்படாத மேற்படி தகைமைகளைக் கொண்ட நபர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் அபேட்சகர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### (2) மேலதிக பணிப்பாளர் நாயகம் - நிதி மற்றும் நிர்வாகம் (HM 2-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் ஒப்படைக்கப்படும் நிர்வாகம் மற்றும் நிதியியல் நடவடிக்கைகளுக்கு இயைபாக அதிகாரம்/ கடமைகள் / வேலைகளை செயற்படுத்தும் பொறுப்பு மற்றும் நிறுவனத்தின் சகல பிரிவுகள் / அலகுகளின் நிர்வாகம் மற்றும் நிதியியல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்

**தகைமைகள்:** பின்வரும் I, II அல்லது III

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் / வர்த்தகம் / கலை / கணக்கியல் / மனிதவள முகாமைத்துவம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய கணக்கியல் நிறுவனத்தில் பதவிக்கு இயைபான விடயத்துறை சார்ந்த அங்கத்துவத்துடன் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் இருபது (20) வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் ஐந்து (5) வருடங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருத்தல் வேண்டும்.

II. பதவிக்கு இயைபான துறையில் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம் / வர்த்தகம் / கலை / கணக்கியல் / மனிதவள முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றுடன் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு: (HM 2-1):** ரூபா 91,645/- 12x2700 = ரூபா 124,045/- /- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தெரிவு செய்யப்படும் விதம்:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**வயதெல்லை:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### (3) பணிப்பாளர் - மனித வள முகாமைத்துவம் (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பிலான கடமை நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்பு வகித்தல், ஊழியர்களின் அபிவிருத்தித் தேவைப்பாடுகளை இனங்காணுதல், விசேடமாக முகாமைத்துவ தரத்திற்கு முறையாக மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனித வள முகாமைத்துவம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மிகவும் தகுதியானதாகவிருக்கும் என்பதுடன் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு:** இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் வகுப்பு அதிகாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### (4) பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம் (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்திற்கு தகவல் தொழில்நுட்ப சேவையை வழங்குதல், வர்த்தக Trade portal ஒன்றைப் பராமரித்தல், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் இணையதளத்தை நாளாந்தம் தரவேற்றம் (Update) செய்தல் இலத்திரனியல் தொடர்பாடல்கள், ஈ- மேம்பாடுகள் போன்றவை, தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்கான உத்திகளை திட்டமிடல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி விஞ்ஞானம் அல்லது அது சார்ந்த துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஆரம்பப் பட்டத்தின் பின் அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### (5) பணிப்பாளர் - நிதி (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிதிக் கொள்கையை வகுத்தல், நிதிச் செயற்பாடுகளின் திட்டமிடல் தொடர்பில் நிறுவனத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை வழங்குதல், வரவு செலவு நிர்வாகம், கணக்கியல், கிரயம் மற்றும் நிதி அறிக்கைகளைத் தயாரித்தல், கடன்களை அறவிடுதல், வங்கிச் செயற்பாடுகள் மற்றும் நிதி முகாமைத்துவம், கணக்காய்வு மற்றும் காப்புறுதி செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஏற்றுமதி அபிவிருத்தி நிதியத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் பொறுப்பு கூறுதல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்று அல்லது

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் அல்லது

ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தின் (CIMA) அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் அல்லது

பட்டய சான்றுபடுத்திய கணக்கியல் நிறுவனத்தின் (ACCA) அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் அத்துடன்

முகாமைத்துவம் அல்லது இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல் அத்துடன் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**இரண்டாம் நிலை**

இலங்கை கணக்காளர் சேவையின் முதலாம் வகுப்பு அதிகாரிகள் இரண்டாம் நிலை அடிப்படையில் நியமனத்திற்காக கவனத்திற் கொள்ளப்படுவர்.

2021-06-13ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் (பணிப்பாளர் - நிதி பதவி) பதவிக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும். முன்பு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### (6) பணிப்பாளர் - விவசாய ஏற்றுமதிகள் (HM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

விவசாயம் மற்றும் கடற்றொழிலை உலக மட்டத்திற்கு உயர்த்துவதற்கு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் மாதிரி பிரதான அங்கமாகும். தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல் மற்றும் உற்பத்தி மற்றும் பயன்பாடுகளை மேலோங்கச் செய்வதற்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் பொதியிடல், அபிவிருத்தி மற்றும் பயிற்சியை வழங்குதல், ஏற்றுமதியாளர்களை உலகளாவிய ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு பங்குபற்றச் செய்தல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சந்தைப்படுத்தல் / சர்வதேச தொடர்புகள் / பொருளியல் / வர்த்தகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு (HM 1-1) :** பணிப்பாளர் - மனித வள முகாமைத்துவம், தகவல் தொழில்நுடபம், நிதி மற்றும் விவசாய ஏற்றுமதிகள் பதவிகளுக்கு: ரூபா 80,295/- 15x 2,270 - ரூபா 114,345/- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தெரிவு செய்யும் விதம்:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**வயதெல்லை:** 55 வயதிற்கு மேற்படாதவர்கள். அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

2021-06-13ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் (பணிப்பாளர் - விவசாய ஏற்றுமதிகள்) பதவிக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும். முன்பு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### (7) உதவிப் பணிப்பாளர் (MM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (05)**

**தொழில் விபரம்**

வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு, வழங்கல் அபிவிருத்தி வாய்ப்புகளை இனங்காணுதல், சிறிய மற்றும் மத்திம அளவான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல். ஏற்றுமதியாளர்களைத் தாக்கும் பாரிய பொருளாதார பிரச்சினைகளுக்கு இயைபாக ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கொள்கை ரீதியாக அடுத்த கட்ட நகர்வுகளை சிபாரிசு செய்தல், பொருள் உற்பத்தி, தரத்தை உயர்த்துதல் மற்றும் பொதியிடலை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றுக்குத் தேவையான ஆலோசனை சேவைகளை வழங்குதல்

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் / சர்வதேச தொடர்புகள் / பொருளியல் / வர்த்தகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு:** கணனி தரவு முகாமைத்துவம் தொடர்பிலான அனுபவம் மற்றும் திணைக்களம் ரீதியான சுற்றறிக்கைகள் தொடர்பான புரிந்துணர்வு இருத்தல் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

### (8) உதவிப் பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம் (MM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

மென்பொருள் முறைமைகளைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல், கணனி வலையமைப்பு மற்றும் இயைபுடைய கணனி சுற்றாடலைப் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல், தகவல் தரவுத் தளம் (database) மற்றும் தரவு முகாமைத்துவ முறைமையைப் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல், தரவு, மென்பொருள் மற்றும் வன்பொருட்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துதல், தரவு Backup மற்றும் disaster recovering செயற்பாடுகளை மேற்கொள்ளல். கணனி சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பணியாட் தொகுதியினர் மற்றும் பயன்பாட்டாளர்களுக்கு உதவி செய்தல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் / மின்சாரம் / தொலைத்தொடர்பு என்பனவற்றை விசேடமாகக் கொண்ட கணனி விஞ்ஞானம் தொடர்பான பட்டம் மற்றும் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு:** கட்டமைக்கப்பட்ட முறைமை பகுப்பாய்வு மற்றும் திட்டமிடல் விதிமுறைகள் தொடர்பில் அனுபவம், நிரலாக்க மொழிகள், தரவு முகாமைத்துவ முறைமை மற்றும் கணனி வலையமைப்பு மற்றும் சேமிப்பக முறைமைகள் தொடர்பான அறிவு மேலதிக தகைமையாகும்.

**சம்பள அளவு (MM 1-1) :** உதவிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பப் பதவிகளுக்கு: ரூபா 53,175 – 10 x 1375 – 15 x 1910 – 95,575/- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தெரிவு செய்யும் விதம்:** எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம்.

**பரீட்சை விடயங்கள் பின்வருமாறாகும்:**

- மொழித் தேர்ச்சி
- தகுதிகாண் பரீட்சை
- பதவிக்கு இயைபான விடய அறிவு
- கணனி பரீட்சை (பதவிக்கு தேவையானால்)

**வயதெல்லை:** 45 வயதிற்கு மேற்படாதவர்கள். அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயதிக்க நிறுவனங்களின் அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### (9) ஏற்றுமதி மேம்பாட்டு அதிகாரி (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (02)**

**தொழில் விபரம்**

பிரிவின் / அலகின் செயற்பாட்டு வேலைகளை உயர் அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல், இயைபுடைய உற்பத்தித் துறையோடு தொடர்புடைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், இயைபுடைய துறைக்கான தரவு / தகவல்களை நாளது தரவேற்றம் செய்தல், பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதியை மேம்படுத்துதல் மற்றும் அது தொடர்பான வேறு வேலைகளில் ஈடுபடுதல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்துதல் / சர்வதேச தொடர்பு / பொருளியல் / வணிகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.

### (10) கணனி நிகழ்ச்சித்திட்டவியலாளர் (COMPUTER PROGRAMMER) (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் சகல பிரிவு/ அலகுகளின் கணனி செயற்பாடுகளுக்கு இயைபான கணனி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அந்த நிகழ்ச்சித்திட்டங்களைப் பராமரித்தல் மற்றும் தேவையானபோது புதிய கணனி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல்

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது பிரித்தானிய கணனி சங்கத்தின் (BCS) அங்கத்துவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணனி தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IMIS) சார்ந்த அல்லது முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

### (11) புள்ளிவிபர அதிகாரி (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

ஏற்றுமதி பிரிவிற்கு இயைபான புள்ளிவிபரத் தகவல்களைச் சேகரித்து கஞ்சியப்படுத்துதல், அடிப்படை புள்ளிவிபர தரவுகளை வழங்குதல் மற்றும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், புள்ளிவிபரத் தகவல்களை விநியோகித்தல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் (புள்ளிவிபரங்கள் தொடர்பானது மிகவும் தகுதியானதாகும்) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும். கணனி தரவு பகுப்பாய்வு அறிவு சாத்தியமானதாகும்.

### (12) கணக்கியல் அதிகாரி (JM 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (01)**

**தொழில் விபரம்**

கணக்கிடல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், நிதி நிர்வாகங்களைப் பராமரித்தல், களஞ்சியசாலையை நிர்வகித்தல், வழங்கல், வெளிநாட்டு பயணங்கள், வெளிநாட்டு வியாபார நிலையங்கள், வெளிநாட்டுக்கு பணம் அனுப்புதல் தொடர்பான கடமைகளை மேற்கொள்ளல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அல்லது இயைபுடைய துறையில் பட்டமொன்று அல்லது இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) நடாத்தப்படும் இடைநிலைத் தகைமையைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தினால் (CIMA) அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் நடாத்தப்படும் இடைநிலைத் தகைமையைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய சான்றுபடுத்திய கணக்கியல் நிறுவனத்தினால் (ACCA) நடாத்தப்படும் இடைநிலைத் தகைமையைப் பெற்றிருத்தல் அல்லது கணக்கியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமாவில் (HNDA) சித்தியடைந்திருத்தல்

**குறிப்பு:** கணனி தரவு முகாமைத்துவம் தொடர்பான அனுபவம் மற்றும் திணைக்கள சுற்றுநிருபம் தொடர்பான அறிவு மேலதிகத் தகைமையாகும்.

**சம்பள அளவு (JM 1-1) :** ஏற்றுமதி மேம்பாட்டு அதிகாரி, கணனி நிகழ்ச்சித்திட்டவியலாளர், புள்ளிவிபர அதிகாரி, கணக்கியல் அதிகாரி பதவிகளுக்கு: ரூபா 42,600/- 10x755 – 18x1,135 = 70,580/- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தெரிவு செய்யும் விதம்: எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம்.

**பரீட்சை விடயங்கள் பின்வருமாறாகும்:**

- மொழித் தேர்ச்சி
- தகுதிகாண் பரீட்சை
- பதவிக்கு இயைபான விடய அறிவு
- கணனி பரீட்சை (பதவிக்கு தேவையானால்)

**வயதெல்லை:** 45 வயதிற்கு மேற்படாதவர்கள். அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### (13) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) (MA 1-1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை (12)**

**தொழில் விபரம்**

இயைபுடைய பிரிவுகளினால் செய்யப்படும் செயற்பாடுகளுக்குரிய சகல ஆவணங்கள் மற்றும் செயலாளர் வேலை நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடிதக் கோவைகளை பராமரித்தல், வருடாந்த அல்லது காலாண்டுகளுக்கு இயைபான தகவல்களை நாளாந்தம் தரவேற்றம் செய்தல் மற்றும் கண்காணித்தல்

**தகைமைகள்:**

அ. சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். மற்றும்

ஆ. க.பொ.த (உ.த) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (பொது வினாத்தாள் தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்

**மேலதிகத் தகைமைகள்:**

- தட்டச்சு வேகம் - ஒரு நிமிடத்திற்கு 30-40 சொற்கள் (ஆங்கிலம் /சிங்களம்)
- ஆங்கில மொழியில் வேலை செய்யும் ஆற்றல்
- தொலைபேசி முறைமை / PABX இயக்கும் ஆற்றல்
- கணனி அறிவு மற்றும் இயைபுடைய துறையில் அனுபவம்

**சம்பள அளவு (MA 1-1) :** முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவிகளுக்கு: ரூபா 27,910/- 10x300 - 7x350 - 4x495 - 20x660 – ரூபா 48,540/- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தெரிவு செய்யும் விதம்:** எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம்.

**பரீட்சை விடயங்கள் பின்வருமாறாகும்:**

- மொழித் தேர்ச்சி
- தகுதிகாண் பரீட்சை
- கணனி பரீட்சை (பதவிக்கு தேவையானால்)
- தட்டச்சு / சுருக்கெழுத்து வேகம்

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

2021-02-19ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் (தொழில்நுட்ப உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத) பதவிக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும். முன்பு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**ஏனைய தகைமைகள்:**

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இயலுமான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**பதவிக்கு உரித்தாகும் ஏனைய அனுகூலங்கள்:**

- ❖ 2016.10.27ஆம் திகதிய PED 1/2015(i) சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாகனமொன்று வழங்கப்படும். (HM 2-2, HM 2-1, HM 1-1 வகுதி பதவிகளுக்கு மட்டும்)
- ❖ ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மருத்துவ உதவித் திட்டம்.
- ❖ பயன்படுத்தாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவு மற்றும் வருடாந்த போனஸ் கொடுப்பனவு
- ❖ அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட நிவாரண வட்டியின் கீழ் வீடமைப்புக் கடன் மற்றும் அனர்த்த கடன்
- ❖ ஊழியர் சேமலாப நிதி – ஊழியர்களிடமிருந்து 10%, நிறுவனத்தினால் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - நிறுவனத்தினால் 3%

**விண்ணப்பிக்கும் முறை**

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளதாயின், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 05ஆம் தளத்தில் அமைந்துள்ள மனிதவள முகாமைத்துவ பிரிவில் அல்லது www.srilankabusiness.com எனும் இணையதளத்தில் ("Announcements" எனும் வகுதியின் கீழ்) பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை 2021-07-28 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இயைபுடைய சகல சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச துறையில் சேவையாற்றுபவர்கள் விண்ணப்பப் படிவங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். அந்த விண்ணப்பப் படிவத்தின் மேலதிக பிரதியொன்றை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

2020-10-26ஆம் திகதிய 02/2020ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்பும் பொறுப்பு வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**NDB – EDB டவர், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-2300700**